முருகப்பெருமான் துணை

# மகான் திருக்குறிப்பு தொண்டர் நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.10.2023,** புதன்கிழமை

1. தவராஜனே ஆறுமுக அரங்கா
   தரணியில் அற்புதம் படைக்க
   அவதாரம் புரிந்த ஞான தேசிகா
   அய்யனே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது துலைதிங்கள்
   குறைவிலா அட்டமதிகதி புந்திவாரம்
   (சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 08 ம் நாள், 25.10.2023, புதன்கிழமை)
   தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
   திருக்குறிப்பு தொண்டர் நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
   உயர் நெறி சைவ நெறியே
   ஞானம் வேண்டுமென அலைபவர்
   நம்பகமுற சைவநெறி ஏற்க வேண்டும்
4. வேண்டி ஜீவகாருண்யம்பட
   வையகத்தில் உயிர்கொலை நீக்கி
   தொண்டு வழி உலக சேமமுற
   தேசிகனின் சேவை கலந்தால்தான்
5. தானாக வாழ்வினில் ஞானம்
   தடையற தவசியால் கிட்டும்
   தானதரும நெறி முறைக்கு
   தக்க ஈடுபாடு கொண்டுவர
6. வருகவே புண்ணிய வழியில்
   வரங்கள் பல கூடியே
   பெருமை மிக்க ஞானவான்கள் ஆக
   பேருலகில் ஆற்றல் பெற நேரும்

7. நேருமையான வழி முறைகளுடன்
ஞானிகளை பூஜை செய்துவர
வறுமையோடு கருமவினை விலகும்
வருங்காலம் செழுமை ஆகும்

8. ஆகவே அரங்கன் வழி
ஆறுமுகப்பெருமான காட்டும்
மிகையான சூட்சும ஞானவழி
முன்வந்து பிரணவக் குடிலை அடைந்து

9. அடைந்து அரங்கனை கண்டு
ஆசி தீட்சை அடைந்து
தடையற அரங்கன் வழி முருகனை
தேடினால் வேலவன் காட்சி

10. காட்சியதும் ஞானமாகத் கிட்டும்
கடைத் தேற்றமும் வாழ்வில் எட்டும்
வாட்டமற தான் வந்த நோக்கம்
விளங்கி மறுமை அகலும்

11. அகலும் சகல தடைகளும்
அரங்கமகா ஞானி தன்னால்
அகன்றுமே பூரணத்துவம் கிட்டும்
அறிவித்த அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–